**Tamil**

**நல்வரவாகுக!**

பீல் குடிவரவு வலைய வாசலுக்கு (Web Portal) நல்வரவாகுக! இந்த இணையத்தளம், பீல் பிராந்தியத்தில் குடியேறுவதற்கு உதவக் கூடிய முக்கிய தகவல்களை அளிக்கின்றது.

வேறு மொழிகளில் உதவி பெறுவதற்கு பல வழிகள் இருக்கின்றன:

<u>வேறு மொழிகளில் சேவைகள்</u>

**பீல் பிராந்தியத்திற்கு புதிதாய் வருபவருக்கான தகவல் நிலையங்கள் (NIC)**: ஆங்கிலத்தைத் தவிர்ந்த வேறு மொழிகளில் உங்களுக்கு உதவக் கூடிய உத்தியோகத்தர் குழுவைக் கொண்டிருக்கும், ஒரு தகவல் அத்துடன் உதவிக்காக வேறு இடங்களுக்கு அனுப்பும் சேவை. உங்களுக்கு அருகில் உள்ள NIC நிலையத்துடன்(NIC location) தொடர்பு கொள்ளவும்.

**குடியமர்வுச் சேவை அமைப்புகள்:** கலாச்சார உணர்வுள்ள திட்டங்களை வழங்கும் அத்துடன் உங்களுடைய உடனடியான குடிவரவுத் தேவைகளில் அநேகமானவற்றிற்கு உதவும். குடியமர்வுச் சேவைகள் அநேகமாக இலவசமாக இருக்கும்; ஆங்கிலத்தைத் தவிர்ந்த வேறு மொழிகளிலும் அளிக்கப்படும் (சில நிலையங்கள், பிரென்ச் மொழி பேசும் உத்தியோகத்தர் குழுவைக் கொண்டுள்ளன). உங்களுக்கு அருகில் உள்ள <u>பீல் பிராந்திய *குடியமர்வுச் சேவைஅமைப்பு* (Settlement Service Organization in Peel)</u> ஒன்றைக் கண்டுபிடிக்கவும்.

<u>வேறு சமுதாய மூலாதாரங்கள்</u>

2-1-1 ஆனது, சமுதாய, சமூக, ஆரோக்கிய அத்துடன் அரசாங்க சேவைகள் போன்ற ஒரு முழு வீச்சான **அவசரநிலை-அற்ற சேவைளுடன் பீல் குடியிருப்பாளர்களை இணைக்கும்** ஒரு தகவல் அத்துடன் உதவிக்காக வேறு இடங்களுக்கு அனுப்பும் ஒரு இலவசமான தொலைபேசித் தகவலாகும். பல மொழிகளில் ஒரு நாளுக்கு 24 மணித்தியாலங்கள்/ஒரு வாரத்தில் 7 நாட்களிலும் கிடைக்கக் கூடியதாக இருக்கின்றது. தனியே 2-1-1 ய் அழைக்கவும்.

**அவசர** சேவைகள் - ஊர் காவற்படை (police), தீ அல்லது காயப்பட்டவர்கள் அல்லது நோயாளிகளை ஏற்றிச் செல்லும் வண்டி (ambulance) க்கு 9-1-1 ய் அழைக்கவும்.

தேவைப்படும் பொழுது 9-1-1 ன் ஊடாக பல-மொழி மொழிபெயர்ப்பு சேவைகள் கிடைக்கக் கூடியதாக இருக்கின்றது. 140க்கும் கூடுதலான மொழிகள் பேசக் கூடிய மொழிபெயர்ப்பாளர்களை அணுகும் வழி அவர்களுக்கு உண்டு.

தாக்கப்பட்ட பெண்களின் உதவிக்கான தொலைபேசித்தொடர்

1-866-863-0511

**150 மொழிகளில் மொழிபெயர்ப்பு சேவைகள் உட்பட தாக்கப்பட்ட பெண்களுக்கான நெருக்கடி தொலைபேசித் தொடர்**

**24 மணித்தியாலங்கள்-ஒரு-நாளில், 7-நாட்கள்-ஒரு வாரத்தில்**

இணையத் தளம் பூராவும், கிடைக்கக் கூடியதாக இருக்கும் பொழுது மறு மொழிகளிலும் நீங்கள் தகவல்களைக் காணலாம்.